**வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று . (குறள்.எண்.11)**

**பொருள்:** மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருவதால் மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத்தக்கதாகும்.

## பழனி நகராட்சி

**2020–ம் ஆண்டு மே மாதம் 29–05–2020 ம் நாள். வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் பழனி நகராட்சியில் சாதாரணக் கூட்டம் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெறும்.**

**நகராட்சி அலுவலகம், பழனி**
**நாள். 29–05–2020**

**தனி அலுவலர்**
**பழனி நகராட்சி**

## கூட்டப்பொருள்

**1.** நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஏற்படும் கசிவுகளை சரிசெய்யவும் மற்றும் தேவையான தளவாட சாமன்களான DieSet, Yarn, Load Wool,wire போன்றவைகள் வாங்கும் பணிக்கு குடிநீர் நிதி 2020–2021–ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு மேற்கொள்ள தனி அலுவலர் கூட்டப் பொருள்எண்.1019 நாள்.30.12.2019–ன் கீழ் நிர்வாக அனுமதி அளித்ததின் பேரில் 09–04–2020–ம் தேதியன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | **திரு. நா.கருப்புச்சாமி ,**<br>18/32, டி.கே.எண்.புதூர்,<br>ஆயக்குடி (Po),<br>பழநி (Tk). | -0.04% மதிப்பீட்டிற்கு குறைவு<br>**ரூ.2500/–**<br>சலான் எண் ந.செ.சீ.எண். 080/1–1–20–21/0000015, நாள். 08/04/2020 |
| 2. | **திரு. P.பழனிச்சாமி,**<br>வேலம்பட்டி,<br>பழநி. | 2.76% மதிப்பீட்டிற்கு அதிகம்.<br>**ரூ.2500/–**<br>சலான் எண் ந.செ.சீ.எண். 080/1–1–20–21/0000019, நாள். 08/04/2020 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்1– ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் **திரு. நா.கருப்புச்சாமி,** என்பவர் -0.04% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு :** குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
(ந.க.எண்.968 /2020/ இ2 ).

**2.**இந்நகராட்சிக்கு 2020–2021 ஆம் ஆண்டிற்கு அனைத்துப் பிரிவு அலுவலர்களுக்கும் தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள் அனைத்து படிவங்கள், கணினி உபகரணங்கள் மற்றும் டோனர்கள் போன்ற அனைத்து பொருட்களையும் அரசுத் துறை சார்ந்த அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு மல்டி பர்பஸ் இண்டிகோ சர்வ் கூட்டுறவு சங்கம், திருச்சி அவர்களிடம் நேரடியாக கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.500000/– (ஐந்து இலட்சம் மட்டும்) மன்ற அனுமதி சவேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
1.மன்றம் அனுமதிக்கலாம்
2.நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.1606/2020/பி5)

**3.** நகராட்சிக்கு சொந்தமான கோடைகால நீர்தேக்கம் புளியமரத்து ஷெட்டில் அமைந்துள்ளது அங்கிருந்து நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது அங்கு நீர் சுத்திகரிக்கப்பட்டு நீரில் போதுமான அளவு குளோரின் கலக்கப்பட்டு வருகின்றது தற்போது குளோரின் கசிவு ஏற்பட்டு கதவு, ஜென்னல் மற்றும் குளோரின் ஷெட் ஆகியவை துருப்பிடித்தும் குளோரின் ஷெட்டினை உடனடியாக சரிசெய்யவும் Window, Exchat Fan, தரைத்தளம் வர்ணம் பூசுதல், குளோரின் சிலிண்டர் இறக்குவதற்கு ஏற்ப Chain block with Channel, Clorine assemble - ஐ உடனடியாக பொருத்த மதிப்பீடு ரூ.7,80,000/—க்கு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலகக்குறிப்பு:**
1) மேற்படி செலவீனத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**4.** நகராட்சிக்கு சொந்தமான ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் கீழ் விளையாட்டு மைதானத்தில் பகலிலும் இரவிலும் கயவர்கள் உட்புகுந்து தேவையற்ற வேண்டாத செயல்கள் நடந்து வருகிறது இதனால் மாணவர்களும், ஆசிரியர்களும் மிகவும் சிரமம்பட்டு வருகிறார்கள் எனவே அதனை தடுக்கும் பொருட்டும் அதனை மேம்படுத்தவும் சில அத்தியாவசிய பணிகள் செய்ய அறிவுறுத்தப்பட்டது அதனடிப்படையில் சுற்றுச்சுவர் ஆங்காங்கே அமைக்கவும், செடிகளை அப்புறப்படுத்தி மண் மேடுகளை அப்புறப்படுத்தவும், முன்வாயிலில் இரும்பு கேட் அமைக்கவும், ஏற்கனவே உள்ள இரண்டு கேட்டுகளில் கூர்மையாக இருக்கும் வண்ணம் வெல்டு அடிக்கவும், உட்புறம் உள்ள சுவற்றில் சாதாரண வெள்ளை அடிக்கவும், மின் விளக்கு அமைக்கவும் உத்தேச மதிப்பீடு ரூ.3,00,000/—க்கு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலகக்குறிப்பு:**
1) மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**5.** பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத்துறை அரசாணை எண்.51 நாள்.07—05—2020—ன் படி, அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் வயது 58—லிருந்து 59—ஆக உயர்த்தியது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலகக்குறிப்பு:** பதிவு செய்யலாம். (ந.க.எண்.1806/2020/சி1)

**6.**இந்நகராட்சியில் நிரந்தரமாக பணிபுரிந்து 2020—21—ம் ஆண்டில் பணி ஓய்வு பெற்ற மற்றும் பெறவுள்ள கீழ்காணும் 5 பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி திட்டத்தின் கீழ் அரசாணை எண்.42 (நிதி) ஓய்வூதியம்) நாள். 15—09—2000 நகராட்சி நிர்வாக பங்குத் தொகையாக தலா ரூ.10000/— வீதம் மொத்தம் ரூ.50000/— மற்றும் சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை மற்றும் வட்டித் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியாளரின் பெயர் விபரம் | ஓய்வு பெற்ற/பெறவுள்ள நாள் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.சிவனருட்செல்வி மின்கம்பி உதவியாளர் (ஓய்வு) | 30—04—2020 | 10000 |
| 2 | திரு.மூக்கன் / கிருஷ்ணன் துப்புரவு பணியாளர் (6—ம் பிரிவு) (ஓய்வு) | 31—05—2020 | 10000 |
| 3 | திருமதி.லட்சுமி / அய்யாச்சாமி துப்புரவு பணியாளர் (5—ம் பிரிவு) (ஓய்வு) | 30—06—2020 | 10000 |
| 4 | திருமதி.சுந்தரம்மாள் / கோபால் துப்புரவு பணியாளர் (5—ம் பிரிவு) (ஓய்வு) | 30—06—2020 | 10000 |
| 5 | திருமதி.மீனாட்சி / செல்லான் துப்புரவு பணியாளர் (6—ம் பிரிவு) (ஓய்வு) | 31—07—2020 | 10000 |
| **மொத்தம்** | | | **50000** |

**அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம். (ந.க.எண்.1542/2020/பி2)

**7.** பழனி நகராட்சி பொறியர் பிரிவின் பயன்பாட்டில் உள்ள ஏழு வாகனங்களுக்கான 2020–2021 – ம் ஆண்டிற்கான வருடாந்திர காப்பீடு தொகை செலுத்த வேண்டி உள்ளதால் காப்பீட்டு தொகைக்கான உத்தேச செலவீனம் ரூ .1,50,000 /- பொது நிதியில் மேற்கொள்ள மன்றப்பொருள் தயார் செய்யப்பட்டு தனி அலுவலர் அவர்களின் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி காப்பீட்டு தொகையினை நியூ இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., பழனி என்ற நிறுவனத்தில் செலுத்திட அனுமதிக்கலாம். (ந.க.எண். 1396 /2018/இ2)

**8.** நகராட்சிக்குட்பட்ட கச்சேரி புதுத் தெருவில் உள்ள அங்கன்வாடி மையத்தில் கூடுதலாக வசதி செய்ய கோரப்பட்டது அதனடிப்படையில் மின் இணைப்பு, கழிவு நீர் வடிகால், முன்புறம் சுவற்றில் ஓவியம், தண்ணீர் வசதி, மேற்கூறையில் சுருக்கி, தட்டோடு, உட்புறம் தரையில் சீமை ஓடு ஆகியவை பதிக்கவும் அங்கன்வாடிமையத்தை பயன்படுத்தி அறிவுறுத்தப்பட்டது அதற்கு மதிப்பீடு ரூ.1,80,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது..

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) அடிப்படை வசதியாக இருப்பதால் மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**9.** பழநி நகராட்சிக்கு பாத்தியப்பட்ட திண்டுக்கல் சாலை வணிக வளாக கடைகள் மேற்கு பக்கம் படிக்கட்டு அருகில் கடைசியில் 4 x 4 அளவுள்ள ஆர்.சி.சி கட்டிட கடை மாத வாடகைக்கு அனுபவித்துக் கொள்ளும் குத்தகை உரிமம் வரிவிதிப்பு எண்.(080/3123). அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி4.) நாள்.03.07.2007–ன் படி ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 5 முறை நடைபெற்றதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மட்டுமே கோரியதால், 04.03.2020–ல் ஆறாவது முறையாக நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.

| வ.எண் | குத்தகை இனத்தின் பெயர்கள் | மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கலந்து கொண்டவர்கள் பெயர் | ஏலக் கேள்வித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | திண்டுக்கல் சாலை வணிக வளாக கடைகள் மேற்கு பக்கம் படிக்கட்டு அருகில் கடைசியில் 4 x 4 அளவுள்ள கடை மாத வாடகைக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமம் (வரி விதிப்பு எண்.080/3123) | 1. திரு.எஸ்.சேக் உசேன், த/பெ.சையது இப்ராகிம், 51, சேரன் தெரு, பழனி.<br><br>2. திரு.ரகமத்துல்லா, 22, சேரன் தெரு, பழனி | –<br><br>– | <u>4,200/–</u><br><br>3,900/– |

மேற்கண்ட இனத்திற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு.எஸ்.சேக் உசேன், சேரன் தெரு, பழநி என்பவர் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி மாதம் ஒன்றுக்கு ரூ.4,200/– (ரூபாய் நான்காயிரத்து இருநூறு மட்டும்) என ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்படி குத்தகை இனம் தொடர்ந்து 5 முறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் யாரும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கேட்க முன்வராத காரணத்தால் நகராட்சிக்கு தொடர்ந்து நிதி இழப்பு ஏற்படும் நிலை உள்ளதால் ஆறாவது முறையாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளியை ஏலக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதை மன்ற அனுமதி வேண்டியும் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எஸ்.சேக் உசேன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏலம்/ஒப்பந்தக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதையும் அன்னாருக்கு மேற்படி இனத்தை ஒப்படைக்கும் நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்கு மாத வாடகை ரூ.4,200/– வீதம் நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மேற்காணும் குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.சேக் உசேன்,பழநி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி இனத்தை ஒப்படைக்கும் நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்கு மாத வாடகை ரூ.4,200/– வீதம் நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.119/2019/அ1)

**10.** இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய விஸ்தரிப்பு பேருந்து நிலையத்தில் தென்கிழக்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமையை (01.04.2019 முதல் 31.03.2022 வரை) திருமதி.கே.ஜோதி க/பெ.கழுவன் என்பவருக்கு அனுபவித்துக் கொள்ள செயல்முறை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. குத்தகைதாரர் திருமதி.கே.ஜோதி க/பெ.கழுவன் 23.09.2019 முதல் இக்கழிப்பிடம் மராமத்து பணி செய்யப்பட்டு வருவதாகவும் அதற்குரிய தொகையை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

இந்நகராட்சி இளநிலைப் பொறியாளர் 23.09.2019 முதல் 14.01.2020 வரை மராமத்துப்பணிகள் நடைபெற்றதாக குறிப்பு வழங்கியுள்ளார். அதன் பேரில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட 23.09.2019 முதல் 14.01.2020 வரை 114 நாட்களுக்கு குத்தகை உரிமத்தினை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க வேண்டியுள்ளது.

மேலும் குத்தகைதாரர் மராமத்து பணி மேற்கொண்ட 2019–2020–ம் ஆண்டு ஓராண்டிற்குரிய (01.04.2019 முதல் 31.03.2020 வரை) குத்தகை தொகை ரூ.17,25,000/– முழுவதும் செலுத்தியுள்ளார். எனவே குத்தகை நீட்டிப்பு காலமான 114 நாட்களுக்கு (01.04.2022 முதல் 23.07.2022) வரை குத்தகை உரிமத் தொகை குத்தகைதாரரால் செலுத்தப்பட வேண்டியதில்லை என்பதனை அனுமதித்து மன்ற அனுமதி வேண்டி தனி அலுவலர்/ஆணையாளர் அவர்களின் மன்றப்பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | குத்தகை இனத்தின் பெயர் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | குத்தகை உரிமம் வழங்கப்பட்ட காலம் | கழிப்பறை மராமத்து பணி மேற்கொள்ளப்பட்ட காலம் | குத்தகை நீட்டிப்பு காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | புதிய விஸ்தரிப்பு பேருந்து நிலையத்தில் தென்கிழக்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் | திருமதி.ஜோதி க/பெ.கழுவன், 4/403/1, பாமா நகர், பிள்ளையார் கோவில் 2–வது தெரு, திருப்பாலை, மதுரை. | 01.04.2019 முதல் 31.03.2022 வரை மூன்றாண்டுகளுக்கு | 23.09.2019 முதல் 14.01.2020 வரை (114 நாட்களுக்கானது) | **01.04.2019 முதல் 23.07.2022 வரை** |

<u>அலுவலகக்குறிப்பு:</u> மேற்காணும் குத்தகை இனத்திற்கு மராமத்து பணி மேற்கொண்ட காலத்திற்கு 114 நாட்களுக்கு (01.04.2022 முதல் 23.07.2022 வரை திருமதி.ஜோதி க/பெ.கழுவன்,மதுரை என்பவருக்கு குத்தகை நீட்டிப்பு வழங்கிடவும் அக்காலக் கட்டத்திற்கு குத்தகை உரிமத் தொகை குத்தகைதாரரால் செலுத்தப்பட வேண்டியதில்லை என்பதனை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.119/2019/அ1)

**11.** பழநி நகராட்சிக்கு சொந்தமான வ.உ.சி. பேருந்து நிலையத்தில் 2018–2019 ஆம் ஆண்டிற்கு பேருந்து நிலைய உட்புறம் மற்றும் வெளிப்புறம் சுவர்களில் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் திரு.மா.சௌந்திரபாண்டியன், PhoenixMedia, 12/24, அஹிம்சாபுரம் முதல் தெரு, செல்லூர்,மதுரை என்பவருக்கு நகர்மன்ற தீர்மான எண்.323 நாள்.22.02.2018–ன் படி இவ்வலுவலக செயல்முறை உத்திரவு நாள்.27.03.2018 அன்று வழங்கப்பட்டது.

2018–19 ஆம் ஆண்டிற்குரிய குத்தகை தொகை ரூ.6,50,000–ஐ குத்தகைதாரர் செலுத்தியுள்ளார். 2019–2020 ஆம் குத்தகைதாரர் செலுத்த வேண்டிய குத்தகை தொகை ரூ.6,82,500– ஐ செலுத்த தெரிவித்து குத்தகைதாரருக்கு முதல், இரண்டாவது மற்றும் இறுதி அறிவிப்பு பதிவஞ்சலில் சார்பு செய்யபட்டது. ஆனால் குத்தகைதாரர் மேற்காணும் குத்தகை தொகையை செலுத்தவில்லை.

ஏனவே நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு பேருந்து நிலைய உட்புறம் மற்றும் வெளிப்புறம் சுவர்களில் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமத்திற்கு குத்தகைதாரர் திரு.மா.சௌந்திரபாண்டியன் என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தை ரத்து செய்வதற்கும் மேற்காணும் இனத்திற்கு மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதனால் ஏற்படும் சகல இழப்புகளுக்கும் குத்தகைதாரரை பொறுப்பாக்கவும் குத்தகைதாரர் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.949/2020/அ1)

**12.** பழநி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 57 U 3226 டிப்பர் லாரி வாகனம் தகுதிச்சான்று காலம் 17-05-2020-வுடன் முடிவடைவதால் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று புதுபிக்க மராமத்து பணிகள் மேற்கொண்டு வர்ணம் பூசுவதற்கு அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.1,20,000/- நிர்வாக கட்டணம் ரூ.5,000/- ஆகமொத்தம் ரூ.1,25,000/–ஐ பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்

<u>அலுவலகக்குறிப்பு</u> பொது சுகாதார அவசரம் அவசியத்தை முன்னிட்டு மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்கள் கூட்டத்தில் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1574/2020/எச்2)

**13.** நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு K.Dis.No.4296/P3/2016, நாள்.16-08-2016–ல் பழநி நகராட்சி எல்லைக்குட்பட்ட **1** முதல் **33** வார்டுகள் மற்றும் பேருந்து நிலையத்தில் துப்புரவு பணிகளை தனியார் ஒப்பந்தம் மூலம் (Out Sourcing) மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதி வழங்கியதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகராட்சி ஆணையர், அவர்கள் பணி உத்தரவு ந.க.எண்.5878/2018/எச்1, நாள்.31-05-2019–ல் தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மேற்க்கொள்ளப்பட்டது. மேற்படி, நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு காலம் 31-05-2020 தேதியுடன் முடிவடைவதால், இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் ஒப்பந்த அடிப்படையில் 105 பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளவும், தற்போது நாடெங்கிலும் பரவி வரும் கொரோனா காய்ச்சல் (COVID-19) தொற்று காரணமாக 144 தடை உத்தரவு அமலில் இருப்பதால் பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு ஏற்கனவே பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ள M/S.PARAMOUNT HOSPITALITY SERVICES, மதுரை என்ற நிறுவனத்திற்கு திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொய்வின்றி செயல்படுத்தவும், மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து ஏற்கனவே பணி உத்தரவில் குறிப்பிட்டுள்ளபடி, நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு தொகை ரூ.362/- வீதம் மற்றும் ESI, காப்பீடு இதர வரி பிடித்தங்கள், சீருடை (ஊதியத்தில் (5%), பாதுகாப்பு உபகரணங்கள், தளவாட பொருட்கள் ஊதியத்தில் (5%) மற்றும் நிர்வாக செலவினம் ஊதியத்தில் (5%) மற்றும் இதர செலவினங்களுக்கு சேர்த்து மூன்று மாத காலத்திற்கு ஆகும் மொத்த செலவின தொகை ரூ.41,87,610/– (ரூபாய் நாற்பத்து ஒன்று இலட்சத்து எண்பத்தெளாயிரத்து அறநூற்று பத்து மட்டும்) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| ஊதியம் (EPF உட்பட Employ & Employee Contribution) (362 x 105 x 92) | 3496920 |
| ESI (ஊதியத்தில் 4.75%) 17.20 x 105 x 92) | 166152 |
| காப்பீடு, இதர வரி பிடித்தங்கள், சீருடை 5% ஊதியத்தில் (5%) | 174846 |
| பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாட பொருட்கள் ஊதியத்தில் (5%) | 174846 |
| நிர்வாக செலவினம் (5%) | 174846 |
| மொத்தம் | 41,87,610 |

அலுவலகக்குறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப்பணிகள் தொய்வின்றி செயல்படுத்தவும், பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு தகுதிவாய்ந்த ஒப்பந்தாரரை தேர்ந்தெடுக்கும் காலம் வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யவும் அல்லது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரருக்கு பணிஉத்தரவு வழங்கும் முன்னர் தேதி வரை இதில் எது முன்னரோ அதுவரை பணி நீட்டிப்பு உத்தரவு வழங்க அனுமதிக்கலாம். (5878/2018/எச்1)

**14.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் K.Dis.No.28369/J3/2018, நாள்.22-11-2018–ல் பழநி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் ஒப்பந்தம் மூலம் (Out Sourcing) மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதி வழங்கியதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகராட்சி ஆணையர், அவர்கள் பணி உத்தரவு ந.க.எண்.5878/2018/எச்1, நாள்.01-03-2018–ல் தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மேற்க்கொள்ளப்பட்டது. மேற்படி, நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு காலம் 31-05-2020 தேதியுடன் முடிவடைவதால், இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் ஒப்பந்த அடிப்படையில் 81 பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 21-02-2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பல்வேறு அலுவலக பணி காரணமாக தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களை தேர்வு செய்ய போதிய கால அவகாசம் இல்லாததால் ஏற்கனவே பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ள M/S.PARAMOUNT HOSPITALITY SERVICES, மதுரை என்ற நிறுவனத்திற்கு திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொய்வின்றி செயல்படுத்தவும், ஏற்கனவே வழங்கப்பட்ட பணி உத்தரவின்படி, **31–05–2020** வரை நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்போது நாடெங்கிலும் பரவி வரும் கொரோனா காய்ச்சல் (COVID-19) தொற்று காரணமாக 144 தடை உத்தரவு அமலில் இருப்பதால் பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு தகுதிவாய்ந்த ஒப்பந்தாரரை தேர்ந்தெடுக்கும் காலம் வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யவும் அல்லது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கும் முன்னர் தேதி வரை இதில் எது முன்னரோ அதுவரை ஏற்கனவே பணி உத்தரவில் குறிப்பிட்டுள்ளபடி, நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு தொகை ரூ.332/- வீதம் மற்றும் ESI, காப்பீடு இதர வரி பிடித்தங்கள், சீருடை (ஊதியத்தில் (5%), பாதுகாப்பு உபகரணங்கள், தளவாட பொருட்கள் ஊதியத்தில் (5%) மற்றும் நிர்வாக செலவினம் ஊதியத்தில் (5%) மற்றும் இதர செலவினங்களுக்கு சேர்த்து மூன்று மாத காலத்திற்கு ஆகும் மொத்த செலவின தொகை ரூ.29,62,691/– (இருபத்தொண்பது இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து அறநூற்று தொண்ணுற்று ஒன்று மட்டும்) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| ஊதியம் (EPF உட்பட Employ & Employee Contribution) (332 x 81 x 92) | 2474064 |
| ESI (ஊதியத்தில் 4.75%) 15.77 x 81 x 92) | 117518 |
| காப்பீடு, இதர வரி பிடித்தங்கள், சீருடை 5% ஊதியத்தில் (5%) | 123703 |
| பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாட பொருட்கள் ஊதியத்தில் (5%) | 123703 |
| நிர்வாக செலவினம் (5%) | 123703 |
| மொத்தம் | 2962691/- |

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப்பணிகள் தொய்வின்றி செயல்படுத்தவும், பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு தகுதிவாய்ந்த ஒப்பந்தாரரை தேர்ந்தெடுக்கும் காலம் வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யவும் அல்லது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரருக்கு பணிஉத்தரவு வழங்கும் முன்னர் தேதி வரை இதில் எது முன்னரோ அதுவரை பணி நீட்டிப்பு உத்தரவு வழங்க அனுமதிக்கலாம். (5878/2018/எச்1)

**15.**நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்டம் கடிதம் ந.க.எண்.5434/2020/J1, நாள்.09-03-2020 மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகள் நாள்.15-03-2020-ன்படி, நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் உடனடியாக மேற்க்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களான முககவசம் மற்றும் கையுறை ஆகியவைகள் அரசு அங்கீகாரம் பெற்ற D.D.673, பழநி வட்டார வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம், பழநி என்ற நிறுவனத்தின் மூலம் நேரடியாக பெற்றுக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/–ஐ (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், பொது சுகாதார அவசர அவசியம் முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதாரம் அவசர அவசியம் முன்னிட்டும், உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுரைகளின்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவின்படியும், மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி நாடடெங்கிலும் நாள்தோறும் அதிகமாக பரவி வரும் கொரோனா (COVID-19) நோய் தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதினை கூட்டப்பொருள் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1253/2020/எச்2)

**நகராட்சி அலுவலகம், பழனி**
**நாள். 29–05–2020**

**தனி அலுவலர்**
**பழனி நகராட்சி**